*இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்*

# ஸ்ரீன் சரூர் எதிர் பிரதமர் காரியாலயம்

*இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழு மேன்முறையீடு (அந்நபரினூடாக) /01/2018 – 2016ம் ஆண்டின் 12ம் இலக்க தகவல் உரிமைக்கான சட்டத்தின் பிரிவு 32(1) இன் கீழான கட்டளை மற்றும் 2017ம் ஆண்டு தகவல் உரிமைக்கான விதிகளின் (கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறை) 28ம் விதிக்கு கீழான நடபடிமுறை பதிவு – மேன்முறையீடானது 15.05.2018 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வமான சந்திப்பின் ஒரு அங்கமாகக் கேட்கப்பட்டது.*

**தலைவர்:** திரு மஹிந்த கம்மம்பில

**ஆணைக்குழு உறுப்பினர்கள்:** செல்வி கிசாலி பின்டோ ஜயவர்தன
திரு.எஸ்.ஜி.புஞ்சிஹேவா
கலாநிதி செல்வி திருச்சந்திரன்
நீதிபதி ரோஹினி வெல்கம

**வருகை தந்தவர்கள்:** பணிப்பாளர் நாயகம் திரு பியதிஸ்ஸ ரணசிங்க

**மேன்முறையீட்டாளர்:** ஸ்ரீன் ஏ. சரூர்

**அறிவித்தல் வழங்கப்பட்ட நபர்:** திரு இ.எம்.எஸ்.பி. ஏக்கநாயக்க, குறித்தளிக்கப்பட்ட அலுவலர் - பிரதமரின் செயலாளர்

**தோன்றல்/ பிரதிநிதித்தவப்படுத்தல்:**

***மேன்முறையீட்டாளர்:*** செல்வி ஸ்ரீன் சரூர்
சங்கிதா குணரட்ண தகவல் உரிமைக்கான மேலாளர் TISL (ஒன்றினைக்கப்பட்ட மேன்முறையீட்டாளர்)
லக்விஜேய பண்டார, TISL
மங்களா சங்கர், ALAC, TISL

***பகிரங்க அதிகார சபை:*** திரு சுரேன் ஞானராஜ், அரச சட்டத்தரணி, சட்டமா அதிபர் திணைக்களம்

ஹாசினி ஜயசேகர, தகவல் அலுவலா்/ உதவி செயலாளா்
பிரதமா் அலுவலகம்.

| | |
|---|---|
| தகவல் உரிமைக்கான கோரிக்கை பதியப்பட்டது | 21.06.2017 |
| தகவல் அலுவலா் பதிலளித்தது | 22.06.2017 (ஏற்றுக்கொள்ளல்)<br>07.07.2017 |
| குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடம் முதலாவது மேன்முறையீடு பதியப்பட்டது. | 22.07.2017 |
| குறித்தளிக்கப்பட்ட அலுவலா் பதிலளித்தது | 27.07.2017 (கடிதம் கிடைக்கப் பெற்றது 31.07.2017) |
| தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு பதியப்பட்டது. | 06.10.2017 |

**சுருக்கமான நிகழ்வுப்பிண்ணனி**

மேன்முறையீட்டாளா் 21.06.2017 எனத் திகதியிடப்பட்ட தகவல் கோரிக்கையொன்றினூடாக பிரதமா் காரியாலயத்திடம் நல்லிணக்கப் பொறிமுறையைகளை ஒருங்கிணைப்பு செய்யும் செயலகத்தினை பற்றிய பின்வரும் விடயங்களை கோரியிருந்தாா்.

A. ஐக்கியநாடுகள் மனித உரிமைக்கான ஆணையகத்தின் தீா்மானம் 30/1 (UN HRC 30/1) இல் இலங்கை அரசாங்கத்தால் கீழ்வருவனவற்றுக்காக மேற்கொள்ளப்பட்ட கடமைகளுடன் தொடா்புடைய முன்மொழிவுகள் அல்லது மற்றும் வரைபுச்சட்டங்கள் அல்லது/ மற்றும் கருத்துக்குறிப்புக்கள் அல்லது/ மற்றும் ஆவணங்கள் என்பவற்றின் பிரதிகள்.

   a. காணமல் போனோா் தொடா்பான அலுவலக உருவாக்கம்
   b. உண்மையை கண்டறியும் பொறிமுறையின் உருவாக்கம்
   c. விசேட ஆலோசகருடன் கூடிய நீதிப்பொறிமுறையின் உருவாக்கம்
   d. உண்மையை தெரிவித்தல், நீதி, நட்டஈடு வழங்குதல் அல்லது மறுபடியும் நிகலாமைக்கான உத்தரவாதத்தை வழங்குதல் போன்ற நோக்கங்களுக்காக உருவாக்கப்படும் வேறு பொறிமுறைகள்.

B. மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் அல்லது/ மற்றும் வரைபுச்சட்டங்கள் அல்லது/ மற்றும் கருத்துக்குறிப்புக்கள் அல்லது/ மற்றும் ஆவணங்கள் தொடா்பில் தேசிய அல்லது

சர்வதேச நிபுணர்களால் மற்றும்/அல்லது வல்லுணர்களால் தயாரிக்கப்பட்ட மதிப்பாய்வு மற்றும் / அல்லது அறிக்கைகள் மற்றும் அல்லது ஆவணங்களின் பிரதிகள்.

C. ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகத்தின் தீர்மானம் 30/1 ஐ அமுல்படுத்துவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள் அல்லது வழிமுறைகள் என்பவற்றின் பிரதிகள்.

தகவல் அலுவலர் 07.07.2017 திகதியிடப்பட்ட கடிதம் மூலம் பின்வருமாறு பதிலளித்திருந்தார். காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் பற்றிய இரண்டு சட்டங்கள் பொது ஆவணங்கள் ஆகையால் அவற்றைப்பெற documents.gov.lk என்ற இணையத்தளத்தை அணுக முடியும் என்றும் மீதமுள்ள ஏனைய விடயங்கள் குறிப்பறிக்கை பெறுவதற்காக அமைச்சரவைத் தீர்மானத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அதனால் அது தகவலுக்கான உரிமைச்சட்டத்தின் விதிவிலக்கான பிரிவு 5(1)(க) க்கு உட்பட்டது எனவும் குறிப்பிட்டிருந்தார். பின்னர் மேன்முறையீட்டாளர் 22.07.2017ந் திகதியன்று குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீடு செய்தார். பின்னர் குறித்தளிக்கப்பட்ட அலுவலரால் அனுப்பப்பட்ட கடிதம் ஒன்றை 31.07.2017ந் திகதியன்று மேன்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டார். குறித்த கடிதம் மேன்முறையீட்டாளரின் தகவல் உரிமைக்கான விண்ணப்பம் தொடர்பில் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளருக்கும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கும் குறித்தளிக்கப்பட்ட அலுவலரால் அனுப்பப்பட்ட கடிதங்கள் இரண்டின் பிரதியை உட்கொண்டிருந்தது.

மேன்முறையீட்டாளர் தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு செய்த மேன்முறையீட்டில் அவர் குறித்தளிக்கப்பட்ட அலுவலரின் தீர்மானமாக தான் அதனை கருதவில்லை என்றும் குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடமிருந்து தான் முடிவு எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார். குறித்தளிக்கப்பட்ட அலுவலரின் பதிலில் அதிருப்தியுற்ற மேன்முறையீட்டாளர் 06.10.2017 அன்று தகவல் உரிமை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்தார்.

**விளக்கத்தின்போது தோன்றிய விடயங்கள்.**

03.05.2018ந் திகதியன்று பகிரங்க அதிகாரசபையால் ஆணைக்குழுவில் எழுத்துமூல சமர்ப்பணம் கோப்பிடப்பட்டது. அதில் பகிரங்க அதிகாரசபையானது குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீட்டாளரால் செய்யப்பட்ட மேன்முறையீட்டக்கு 27.07.2017 திகதியிடப்பட்ட கடிதம் மூலம் உண்மையில் பதிலளிக்கப்பட்டது என குறிப்பிட்டிருந்ததோடு குறித்த கடிதத்தின் பிரதியும் இணைத்திருந்தது. மேலும் மேன்முறையீட்டாரரின் கோரிக்கையானது தேசிய ஒருங்கிணைப்பு

மற்றும் நல்லிணக்க அமைச்சுக்கும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கும் 27.07.2017ந் திகதிய கடிதங்கள் மூலம் (மேன்முறையீட்டாளருக்குரிய பிரதியுடன்) முறையாக மாற்றஞ் செய்யப்பட்டது எனவும் பகிரங்க அதிகாரசபை குறிப்பிட்டிருந்தது. மேலும் 03.02.2017ந் திகதியிடப்பட்ட 2004/66 இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கீழ் வெளியிடப்பட்ட தகவல் உரிமைக்கான ஒழுங்குமுறையின் விதி 4 பிரிவு 6 இற்கு இணங்க தாம் செயற்பட்டிருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தனர். குறித்த பிரிவு பின்வருமாறு கூறுகிறது.

*தகவல் தொடர்பாக கோரிக்கை பிறிதொரு பகிரங்க அதிகாரசபையிடம் இருப்பதாக தகவல் அலுவலர் அறிவாறாயின், தகவல் அலுவலர் தகுந்தவாறு எழுத்து வடிவத்தில் கோரிக்கையை சம்பந்தப்பட்ட பகிரங்க அதிகாரசபைக்கு மாற்றுவதுடன் அதற்கிணங்க கோரிக்கையை மேற்கொண்ட பிரஜைக்கு கோரிக்கை கிடைத்த திகதியிலிருந்து 7 நாட்களினுள் அதனைத் தெரிவித்தலும் வேண்டும்*

மேலும் ஒழுங்குமுறையின் விதி 4 பிரிவு 7 குறிப்பிடுவதாவது:

*ஒரு பகிரங்க அதிகாரசபை கோரிக்கை ஒன்றுக்குப் பதிலளிப்பதற்காக தகவல்களைச் சேகரிக்குமாறு வேண்டப்படலாகாது. ஆனால், பகிரங்க அதிகாரசபையிடம் சாதாரணமாகக் கிடைக்ககூடியதாக உள்ள வளங்களைப் பயன்படுத்தி நியாயமான முயற்சியின் மூலம் பகிரங்க அதிகாரசபையிடம் உள்ள பதிவுகளில் இருந்து தகவல்களை வழங்கலாம் அல்லது நியாயமான முயற்சியின் மூலம் பகிரங்க அதிகாரசபையிடம் உள்ள பல்வேறு பதிவுகளிலிருந்து தகவல்களை தொகுக்க முடியுமாக உள்ளபோது அதனிடம் தகவல்கள் இல்லை என்னும் அடிப்படையில் கோரிக்கை ஒன்றை அது மறுத்தலாகாது.*

அதன்படி மேன்முறையீட்டாளரின் விண்ணப்பம் மாற்றப்பட்டதன் பின்னர் தகவல அறியும் உரிமைச் சட்டம் மற்றும் அதன் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் கீழ் முதலாவது பகிரங்க அதிகாரசபைக்கு எதிரான எந்தவொரு சட்ட உதவியும் மேன்முறையீட்டாளருக்கு கிடையாது என பகிரங்க அதிகாரசபை குறிப்பிட்டிருந்தது. மேலும் மேன்முறையீட்டாளர் குறித்தளிக்கப்பட்ட அலுவலரின் பதிலை வெளிப்படுத்தாமையால் குறித்த மேன்முறையீடானது சட்டமுரணானது எனவும் பகிரங்க அதிகாரசபை குறிப்பிட்டிருந்தது. மேலும் குறித்த மேன்முறையீடானது காலங்கடந்த ஒன்று எனவும் குறிப்பிட்டது. அதாவது குறித்தளிக்கப்பட்ட அலுவலரின் முடிவானது 31.07.2017 அன்று மேன்முறையீட்டாளரை சென்றடைந்துள்ளது. ஆனால் மேன்முறையீடானது 06.10.2017 அன்று செய்யப்பட்டுள்ளது. இது 2016ம் ஆண்டின் 12ம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 32(1) இன் படி ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள இரண்டு மாதகாலம் என்பதை கடந்து செய்யப்பட்டுள்ளது.

மேலும் பகிரங்க அதிகாரசபையானது தனது சமர்ப்பணத்திற்கு பங்கம் ஏற்படாத வகையில், தனது உடமையில் அல்லது பாதுகாப்பில் அல்லது தனது கட்டுப்பாட்டில் இல்லாத தகவல் தொடர்பில் குறிப்பிட்டதாவது, பொருத்தமான பகிரங்க அதிகாரசபையிடமிருந்து தன்னிச்சையாக தாம் சில தகவல்களை பெற்றிருப்பதாகவும் அவற்றை மேன்முறையீட்டு விளக்கத்தின் போது மேன்முறையீட்டாளருக்கு கிடைக்கப்பெறச் செய்வதாகவும் குறிப்பிட்டிருந்தது.

விடயம் A தொடர்பில்:

a. காணமல் போனோர் தொடர்பான அலுவலக உருவாக்கம்
   - Office on Missing Person (establishment, Administration and Discharge of Function) Act No.14 of 2016 (OMP Act) (இணையத்தளத்தில் கிடைக்கும்)
   - Office on Missing Person (establishment, Administration and Discharge of Function) Amendment Act No.09 of 2017 (OMP Act) (இணையத்தளத்தில் கிடைக்கும்)
   - Order under Section 1(2) of the OMP Act (as amended) and published in the Gazette No. 2036/21 dated 12th September 2017.

b. உண்மையை கண்டறியும் பொறிமுறையின் உருவாக்கம்
   - நல்லிணக்க பொறிமுறை தொடர்பான ஊவுகு இன் 17.11.2016ந் திகதி இறுதி அறிக்கை (இணையத்தளத்தில் கிடைக்கும்)

c. இழப்பீட்டுக்கான அலுவலக உருவாக்கம்
   - 05.03.2018ந் திகதிய அமைச்சரவைக் குறிப்பாணை மற்றும் 06.03.2018ந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம்

d. விசேட ஆலோசகருடன் கூடிய நீதிப்பொறிமுறையின் உருவாக்கம்
   - நல்லிணக்க பொறிமுறை தொடர்பான ஊவுகு இன் 17.11.2016ந் திகதி இறுதி அறிக்கை (இணையத்தளத்தில் கிடைக்கும்)

e. உண்மையை தெரிவித்தல், நீதி, நட்டஈடு வழங்குதல் அல்லது மறுபடியும் நிகழாமைக்கான உத்தரவாதத்தை வழங்குதல் போன்ற நோக்கங்களுக்காக உருவாக்கப்படும் வேறு பொறிமுறைகள்.

- 07.03.2018ந் திகதி பாராளுமன்றத்தால் வெளியிடப்பட்ட வலிந்து காணமல் ஆக்கப்படுவதிலிருந்து எல்லா நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயம் தொடர்பான மசோதா.

- மனிதர்களுக்கு எதிரான மற்றும் அவர்களை அழிக்கும் கண்ணிவெடிகளை பாவித்தல், சேகரித்து வைத்தல், உற்பத்தி செய்தல் மற்றும் கைமாற்றுதல் என்பவற்றை தடுக்கும் ஒட்டாவா சமவாயத்தில் இலங்கை இணங்கிக் கொள்வதற்கான 11.12.2017ந் திகதிய கூட்டு அமைச்சரவைப் பத்திரம் மற்றும் 12.12.2017ந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம்.

- சித்திரவதை மற்றும் கொடுமையான, மனிதத்தன்மையற்ற மற்றும் மோசமான நடத்துகை அல்லது தண்டணைகளுக்கு எதிரான விருப்பத்தெரிவு உடன்படிக்கையில் இலங்கை இணங்கிக் கொள்வதற்ாகன 10.11.2017ந் திகதிய அமைச்சரவைப் பத்திரம் மற்றும் 14.11.207ந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம்.

விடயம் C தொடர்பில்:

C. ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகத்தின் தீர்மானம் 30∴1 ஐ அமுல்படுத்துவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள் அல்லது வழிமுறைகள் என்பவற்றின் பிரதிகள்.

- 01.11.2017ந் திகதி ஆரம்பிக்கப்பட்ட மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான தேசிய செயற்றிட்டம் 2017 20121

விளக்கத்தின் போது மேன்முறையீட்டாளர் தான் ஒரு மனித உரிமை செயற்பாட்டாளராக இருப்பதால் குறித்த தகவல்களை கேட்டிருந்ததாகவும் மேலும் அவர் இலங்கையில் நிலைமாறுகால நீதி முயற்சிகள் தொடர்பில் என்ன நிகழ்ந்து கொண்டிருக்கின்றது என்பது தொடர்பான தகவல்களை பெற விரும்பும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல பட்டறைகளை (workshops) ஒழுங்கு செய்து நடாத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டார். மேலும் மேன்முறையீட்டாளர்,

தானும் மற்றும் இன்னும் சிலரும் ஆலோசகா் பணிக்குழுச் (CTF) செயல்முறையில் பங்குபற்றியிருந்ததாகவும் ஆகையால் அரசாங்கத்தினால் பொறுப்பெடுக்கப்படவுள்ள நிலைமாறுகால நீதி முயற்சிகளில் ஊவுகு இன் பரிந்துரைகள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதா என்பதை தான் அறிந்து கொள்ளவே குறித்த தகவல்களை கோரியிருந்ததாகவும் குறிப்பிட்டார்.

மேலும் அவர், தானும் மற்றும் இன்னும் சில செயற்பாட்டாளர்களும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்துடன் சேர்ந்து வேலை செய்வதாகவும் , காணாமல் போனோரின் அலுவலகத்திற்கு சமா்ப்பிக்கப்படும் இரகசிய தகவல்களை பாதிக்கப்பட்ட நபர்கள் அணுகுவதற்கான உரிமையின்றி காணாமல் போனோரின் அலுவலகச் சட்டம் வெளியிடப்பட்டுள்ளதாக தான் கருதுவதாகவும் நிலைமாறுகால நீதிச் சீர்த்திருத்தங்களின் கீழ் உருவாக்கப்பட்ட எல்லா அமைப்புக்களினதும் பொறுப்புக்கூறும் தன்மையுடன் கூடிய வெளிப்படையான செயற்பாட்டுக்கு இது முக்கியமாயிருந்தது எனவும் குறிப்பிட்டார். மேலும் அவர், கொழும்பில் திட்டமிட்டப்பட்ட சட்டசீர்திருத்தங்களுடன் அதன் எல்லைக்கு அப்பாலுள்ள செயற்பாட்டாளா்கள் தொடர்புபட்டிருக்கவில்லை என்றும் ஆகையால் தான் தானும் மற்றும் ஏனைய செயற்பாட்டளர்களும் மேற்குறித்த ஆவணங்களைப் பெற தகவல் உரிமைக்கான கோரிக்கையை கோப்பிட்டதாகவும் குறிப்பிட்டார்

பகிரங்க அதிகார சபையின் எழுத்து மூல சமர்ப்பணத்திலுள்ள விடயங்ளை பகிரங்க அதிகாரசபையின் ஆலோசகர் மீண்டும் வலியுறுத்தி கூறியதேடு மேலும் அவர் காணாமல் போனோரின் அலுவலகத்துடன் தொடா்புபட்ட தகவலுக்கான கோரிக்கையானது குறித்த விடயம் ஒப்படைக்கப்பட்டுள்ள தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் ஏனைய விடயங்கள் தொடர்பான தகவல் விண்ணப்பம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெளிவுபடுத்தி கூறினார்

மேலும் ஆலேசகர், குறித்தளிக்கப்பட்ட அலுவலரின் தீர்மானமும் சம்மந்தப்பட்ட அமைச்சுக்கு கோரிக்கை அனுப்பட்டமைக்கான 27.07.2017ந் திகதிய கடிதங்கள் இரண்டின் பிரதியும் உள்ளதாகவும் அவை மேன்முறையீட்டாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். அதனை தொடர்ந்து மேன்முறையீட்டாளரும் அவருடைய கோரிக்கை தொடர்பில் இரண்டு அமைச்சுக்கும் எழுத்து மூலமான நினைவுபடுத்தலை செய்து உள்ளாா் என்றும் குறிப்பிட்டுள்ளாா். மேலும் ஆலோசகா் அவா்கள் இவ்விடயத்தை கவனத்திற் கொள்ளாவிட்டல் பகிரங்க அதிகார சபை அமைச்சுக்களுக்கு எழுத்துமூலம் அறிவித்துவிட்டு தகவல்களை சேகரித்து வழங்குவதற்கு குறித்த அமைச்சுக்களிடமிருந்து வரும் பதிலிலுக்காக பகிரங்க அதிகாரசபை காத்திருப்பது போல

தோன்றும். இது பகிரங்க அதிகாரசபை மீதான தவறான ஒரு தோற்றப்பாட்டை வழங்கும் என்றும் அவா் மேலும் குறிப்பிட்டாா்.

மேன்முறையீட்டாளா் குறிப்பிடுகையில். அவா் குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடமிருந்து 31.07.2017 ந் திகதிய பதிலை பெற்றுக் கொண்ட போது அவா் அதனை ஒரு பதிலாக கருதவில்லை என்றும் ஆனால் அதனை அவா் ஒரு பரிந்துரையாக கருதியதாகவும் குறிப்பிட்டாா். மேலும் அது தன்னுடைய பிழை என்பதையும் அவா் ஏற்றுக் கொண்டாா். மேலும் ஆணைக்குழுவுக்கு அவர் மேன்முறையீடு செய்ததற்கு காரணம் குறித்த அமைச்சுக்களுக்கு அவரால் செய்யப்பட்ட தொடா்ச்சியான தொலைபேசி அழைப்புக்களும் விண்ணப்பங்களும் குறித்த கால எல்லையை கடந்து விட்டது என்பதனாலாகும் என குறிப்பிட்டாா். மேலும் எந்தவொரு உருவுள்ள விடயங்களும் சமா்ப்பிக்கப்பட்டிருக்காததால் நிலைமாறுகால நீதியை முன்னெடுத்துச் செல்வதில் தானும் மற்றும் ஏனைய செயற்பாட்டாளா்களும் பெரும் சிரமத்தை எதிா் கொண்டிருந்ததாகவும் அவா் குறிப்பிட்டாா். மேலும் மேன்முறையீட்டாளா் தனது விண்ணப்பத்தின் உள்ளடக்கம் பற்றி கூறுகையில் குறித்த நேரத்தில் எந்த தகவல் கிடைக்கப்பெறக்கூடியதாக உள்ளது என்பதனை தான் சரியாக அறிந்திருக்கவில்லை என்றும் அதனால் பகிரங்க அதிகார சபையில் கிடைக்க கூடியதாயிருந்த எல்லாத் தகவல்களுக்கும் தான் விண்ணப்பம் செய்ததாகவும் குறிப்பிட்டாா்.

பகிரங்க அதிகார சபையானது சட்டத்தின் பிரிவு 5(1)(க) ஐ மேற்கோள் காட்டி தகவலை வழங்க மறுத்து விட்டது என வுஜளூடு இன் தகவல் உரிமைக்கான மேலாளா் குறிப்பிட்டாா் : பிரிவு 5(1)(க) குறிப்பிடுவதாவது.

> *எந்த அமைச்சரவைக் குறிப்பறிக்கையொன்று தொடர்பாக முடிபொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லையோ அந்த அமைச்சரவைக் குறிப்பறிக்கையினதாக தகவலானது உள்ளவிடத்து:*

ஒரு தகவல் அதிகாரி விதிவிலக்கை நாடுவதாக இருந்தால் அவா் குறித்த ஆவணங்களை முழுமையாக கவனத்துடன் வாசித்திருக்க வேண்டும். அது குறித்த தகவலை பகிரங்க அதிகாரசபையின் பாதுகாப்பின் கீழ் பெற்றுக் கொள்ளக் கூடியதாய் இருக்கும் என்பதை உட்கிடையாக கூறுவதாக அமையும் எனவும் அவா் குறிப்பிட்டாா்.

தகவல் அதிகாரி பிரிவு 5(1)(க)ஐ மேற் குறிப்பிட்டு பதிலளித்தமை தொடா்பில் பகிரங்க அதிகாரசபையின் ஆலோசகா் தெளிவுபடுத்துகையில் குறித்த விடயம் பற்றி தெரிந்திருக்கின்றது என்பதை விட குறித்த நேரத்தில் அது அமைச்சரவைக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ளது என

தகவல் விண்ணப்பத்தையும் அதனுடன் இணைந்த ஆவணங்களையும் விரிவாக மதிப்பீடு செய்வதன் அடிப்படையில் தான் தகவல் வழங்க மறுக்கும் விதிவிலக்கு இருக்கும் எனக் குறிப்பிட்டார்.

மேன்முறையீடு விளக்கம் செய்யப்படும் இந்த சந்தர்ப்பத்தில் கோரப்பட்ட ஏதாவது ஒரு ஆவணத்தில் பிரிவு 5(1)(க) எந்தளவு பிரயோகப்படுத்தப்படும் என ஆணைக்குழுவால் வினப்பட்ட போது பகிரங்க அதிகார சபையின் ஆலோசகர் குறித்த விடயம் தொடர்பான சரியான நிலை பற்றி தான் அறிந்திருக்கவில்லை என்றும் பகிரங்க அதிகாரசபையால் பெறக்கூடியதாக இருந்த எல்லாத் தகவ்லகளையும் மேன்முறையீட்டாளருக்கு உடனடியாக விளக்கத்தின்போது அளித்திருந்தமை பற்றி தான் அறிந்திருந்தாகவும் குறிப்பிட்டார். மேலும் பகிரங்க அதிகாரசபையை இன்னொரு அமைச்சிடமிருந்த தகவல்களை சேகரிக்கும் படி மற்றும் தகவல்களை தொகுக்கும் படி வேண்டப்படுதலானது தகவல் உரிமைச்சட்டம் மற்றும் அதனது விதிகள் மற்றும் சீர்திருத்தங்களின் கீழ் பகிரங்க அதிகாரசபையின் கடமையாக இல்லை எனவும் வாதிட்டார்.

குறித்த இந்த மேன்முறையிட்டுக்கு சமுகம் தரும்படி தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவின் அறிவித்தல் கிடைக்கப்பெற்றதன் மீது அதற்கு மரியாதை செலுத்தும் பொருட்டு தற்போது ஆணைக்குழுவின் முன்னிலையில் பகிரங்க அதிகாரசபையால் தகவல்கள் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் வலியுறுத்தி கூறினார்.

**ஆணை**

குறித்த தகவல் கோரிக்கையானது இலங்கையின் நிலைமாறுகால நீதியின் நடவடிக்கை முறையுடன் தொடர்புடைய விடயங்களுடன் சார்ந்தருந்தது ஆகையால் குறித்த தகவல்கள் பொதுநலனுக்கு முக்கியமானது.

குறிப்பாக வரைபுச்சட்டங்கள் முக்கியமாயிருக்கின்ற போது இந்த ஆணைக்குழு *கோமஸ் எதிர் சமூக மேம்பாடு, பொதுநல மற்றும் கண்டியன் பாரம்பரிய அமைச்சு (RTIC Appeal 51/2018, RTIC Minutes, 27.02.2018)* என்ற மேன்முறையீட்டில் தான் செலுத்திய அவதானத்தையே வலியுத்திக்கூறுகிறது. அதாவது உலகத்திலுள்ள பல நாடுகளில் மசோதா ஒன்று வர்த்தமானியில் வெளியிடப்படுவதற்கு முன்னர் வரைபுச்சட்டங்கள் அதன் உள்ளடக்கம் தொடர்பில் மக்களின் கருத்தைப் பெறுவதற்காக மக்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கப்படுகின்றன. இது சட்டவாக்கத்தை சுற்றி பொதுமக்களின் கருத்துக்கணிப்பை முன்னெடுத்துச் செல்வதற்கான சிறந்ததொரு வழிமுறையாகும். இந்த அவதானமானது நிகழ்வுகளின் உள்ளடக்கத்தில் அவதானத்தைச் செலுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது. அதாவது சட்டத்தில் தகவலுக்கான

வரைவிலக்கணப்பிரிவு 43 அதனது எல்லைக்குள் வரைபுச்சட்டம் என்பதனையும் உட்கொண்டுள்ளது.

அவருடைய 06.10.2017ந் திகதிய ஆணைக்குழுவிற்கான மேன்முறையீட்டில், மேன்முறையீட்டாளர் அவருடைய விண்ணப்பம் தொடர்பில் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சுக்கும் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கும் 27.07.2017 திகதியிடப்பட்டு பகிரங்க அதிகாரசபையால் அனுப்பப்பட்ட இரண்டு கடிதங்கள் பற்றி குறிப்பிட்டிருந்தார். மேன்மறையீட்டாளரின் தகவல் விண்ணப்பம் பொருத்தமான பகிரங்க அதிகாரசபைக்கு மாற்றப்பட்டள்ளது என அவருக்கு அறிவிக்கப்பட்ட கடிதத்தை அவர் கோப்பிடாமை அதனை அவர் வேண்டுமென்று செய்தார் என்பதனை விட கவனக்குறைவால் நிகழ்ந்துள்ளது என்ற அடிப்படையில் அதற்கு அவரால் கொடுக்கப்பட்ட விளக்கத்தை ஆணைக்குழு ஏற்றுக்கொள்கிறது.

பகிரங்க அதிகாரசபையானது சட்டத்தின் பிரிவு 32(1)(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலஎல்லைக்குள் ஆணைக்குழுவிற்கான மேன்முறையீட்டாளரின் மேன்முறையீடு அமையவில்லை என்ற அடிப்படையில் ஒரு வினாவை எழுப்பியிருந்தது. அதாவது மேன்முறையீட்டாளர் பிரிவு 32(1)(அ) இல் குறிப்பிடப்பட்ட காலஎல்லைக்குள் தனது மேன்முறையீட்டை செய்யமுடியாமல் போனமைக்கு காரணம் தனது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஒரு விடயம் தான் என்பதனை வெளிப்படுத்தவில்லை என கூறப்பட்டிருந்தது. மேன்முறையீட்டாளர் தனது தகவலுக்கான கோரிக்கை பகிரங்க அதிகாரசபையால் மாற்றஞ் செய்யப்பட்ட பொருத்தமான அமைச்சுக்களிடமிருந்து குறித்த தகவலை பெற முயற்சித்ததாகவும் அதில் தோல்வியுற்றதன் அடிப்படையிலேயே இம்மேன்முறையீட்டை செய்ததாகவும் விளக்கமளித்தார்.

சட்டத்தின் பிரிவு 32(2) இன் படி தாமதத்திற்கான நியாயமான காரணத்தை மேன்முறையீட்டாளர் விளக்கியுள்ளார். என்பதனை நாங்கள் குறித்துக் காட்டுகின்றோம். இலங்கையில் தகவலுக்கான சட்டமானது இன்னும் புதிய சட்டமாகவே உள்ளதால் தகவலுக்கான கோரிக்கை மற்றும் மேன்முறையீடுகளை செய்தல் தொடர்பாக நடபடிமுறைகளையும் பயிற்சிகளையும் பிரஜைகளும் பகிரங்க அதிகாரசபைகளும் பழக்காமாக்கிகொள்ள தொடங்கியுள்ளனர் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகும்.

ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள விடயங்களின்படி குறிப்பிடத்தக்கது என்னவெனில் இந்த மேன்முறையீட்டில் உள்ள பகிரங்க அதிகாரசபையின் ( பிரதமரின் அலுவலகம்) உடமையில், பாதுகாப்பில் மற்றும் கட்டுப்பாட்டில் பிரதமராலும் தேசிய மற்றும் பொருளாதார அமைச்சராலும் ஒப்பமிடப்பட்டுள்ள இழப்பீட்டுக்கான அலுவலகத்தை உருவாக்குவதுடன் தொடர்புடைய 2018.03.5ந்

திகதிய அமைச்சரவைக் குறிப்பறிக்கையானது (இல 18/0430/702/008) இருந்த காரணத்தால் அது சட்டத்தின் பிரிவு 3 இன் கீழான தகவல் என்பதற்குள் அடங்கும்.

மேலும் ஆணைக்குழு குறிப்பிடுவதாவது மேற்குறிப்பிட்ட அமைச்சரவைகட குறிப்பறிக்கையுடன் இணைந்த குறித்த 6.5.2018ந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தில் இழப்பீட்டுக்கான அலுவலகத்தை அமைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டு அதற்கான குறிப்பறிக்கையும் முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் குறித்த குறிப்பறிக்கையுடன் இணைக்கப்பட்டிருக்கும் வரைபு இணைப்பை அடிப்படையாகக் கொண்டு சட்டத்தை வரையுமாறு சட்ட வரைஞர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. குறித்த வரைபும் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. இழப்பீடு தொடர்பில் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள வரைபு சட்டமானது *கோமஸ் எதிர் சமூக மேம்பாடு, பொதுநல மற்றும் கண்டியன் பாரம்பரிய அமைச்சு* என்ற மேன்முறையீட்டில் ஆணைக்குழுவால் விசேடமாக குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் வெளிப்பாடாகும்.

மேன்முறையீடானது 10.07.2018ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மேலும் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் தகவல் அலுவலரும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் தகவல் அலுவலரும் குறித்த அமைச்சுக்களுக்கு 27.07.2017ந் திகதிய கடிதம் மூலம் அனுப்பப்பட்ட மேன்முறையீட்டாளரின் தகவல் விண்ணப்பம் தொடர்பான அவசியமான விளைவுகள் பற்றி அறிந்து கொள்ள குறித்த திகதிக்கு ஆணைக்குழுவில் தோன்றவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

************